**Source:** *Tamil Murasu*, p1
**Date:** 11 August 2022

# புதிய லாங்யா கிருமியால் அச்சம் தேவையில்லை

சீனாவில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய கிருமியால் உலகம் முழுவதும் கவலை ஏற்பட்டுள்ளது. ஆனால் அச்சமடைய தேவையில்லை என்று ஆய்வாளர்கள் கூறி உள்ளனர். விலங்குகளிடமிருந்து பரவு வதாக நம்பப்படும் அந்தக் கிருமி ஷாண்டோங், ஹெனான் மாவட்டங்களில் 35 பேரை பாதித்துள்ளது.

நியூ இங்கிலாந்து மருத்துவ சஞ்சிகையில் வெளியான ஆய்வுக் கட்டுரையில் சீனா, சிங்கப்பூர், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஆய்வாளர்கள் புதிய கிருமி பற்றி தெரிவித்துள்ளனர்.

'லாங்யா' அல்லது 'லேவி' என்று சுருக்கமாக குறிப்பிடப்படும் புதிய கிருமி 2018 பிற்பகுதியில் முதல் முறையாக கண்டறியப்பட்டது. ஆனால் கடந்த வாரம்தான் ஆய்வாளர்கள் அதனை அடையாளம் கண்டனர் என்று 'த கார்டியன்' தெரிவித்தது.

தொண்டையில் இருந்து எடுக்கப்பட்ட மாதிரிகளை ஆய்வு செய்ததில் புதிய கிருமி பற்றி தெரிய வந்தது. பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலோர் விவசாயிகள். இந்த நவீன கிருமி, இதற்கு முன் மனிதர்களைப் பாதித்ததாகத் தெரியவில்லை.

ஆனால் இதே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு கிருமிகள் இதற்கு முன் அடையாளம் காணப்பட்டன. அவை ஹெண்ட்ரா, நிபா கிருமிகளாகும்.

இரண்டு கிருமிகளும் தீவிர பாதிப்பை ஏற்படுத்தி சில சமயங்களில் மரணத்தை விளைவிக்கக் கூடும். இதற்கு இதுவரை தடுப்பூசியோ சிகிச்சையோ இல்லை என்று 'த சன்' குறிப்பிட்டது.

ஷாண்டோங், ஹெனான் மாவட்டங்களில் லாங்யா கிருமியால் பாதிக்கப்பட்ட 35 பேரில் 26 பேருக்கு காய்ச்சல், எரிச்சல், இருமல், தலைவலி, மயக்கம், வாந்தி போன்ற அறிகுறிகள் இருந்ததை ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளதாக 'த குளோபல் டைம்ஸ்' தெரிவித்தது. இதுவரை லாங்யா சம்பவங்களால் யாரும் உயிரிழக்கவில்லை. இதனால் அச்சமடையத் தேவையில்லை என்று ஆய்வாளர்களில் ஒருவரான சிங்கப்பூரின் டியுக்–என்யுஎஸ் மருத்துவப் பள்ளியின் புதிய தொற்றுநோய்களுக்கான திட்டத்தின் பேராசிரியர் வாங் லின்ஃபா தெரிவித்தார்.

இருந்தாலும் இயற்கையில் காணப்படும் பல கிருமிகள் மனிதர்களை தொற்றி கணிக்க முடியாத விளைவுகளை ஏற்படுத்தலாம் என்பதால் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.